REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)



CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 CLICK - 10

FEBRUARY 2026 ₹. 1

**நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!**

**- CVPA NNT**

# CVPA செயலாளரின் அறிவிப்பு

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம் !

இந்த ஆண்டுக்கான பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் பங்கேற்று தேர்வு எழுத போகும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் நல்ல முறையில் தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெற்றிட நமது சங்கம் சார்பாக வாழ்த்துகிறோம்.

2026 ஆம் ஆண்டுக்கான, CVPA டைரி மற்றும் காலண்டரை CVPA உறுப்பினர்களுக்கு, வழங்கும் பணியை நமது சங்க நிர்வாகிகளும், பகுதி செயலாளர்களும் 80 சதவீதம் கொடுத்து முடித்து விட்டார்கள் என்கிற செய்தியை மகிழ்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும் சில பகுதிகளில் டைரி மற்றும் காலண்டர் கிடைக்காமல் இருக்கும் ரெனிவலில் உள்ள சங்க உறுப்பினர்கள் உங்கள் பகுதியை சேர்ந்த நிர்வாகிகள் அல்லது பகுதி செயலாளரிடம் உடனடியாக கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். சங்க உறுப்பினர்களுக்கு டைரி,காலண்டர் உரிய நேரத்தில் வழங்க முடியாமல் போனதற்கு நமது நிர்வாகம் சார்பாக வருத்தத்தை தெரிவித்து கொள்கிறோம்.

நம்முடைய CVPA சங்கம் ஒரு கட்டுக் கோப்பான சங்கமாக கடந்த 30 ஆண்டு களாக செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்திற்கு எதிராக சங்கம் தொடங்கியவர்களின் இன்றைய நிலை என்ன என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். நம்முடைய சங்கத்தில் உறுப்பினராக இருந்து கொண்டு, வேறு ஒரு மாற்று சங்க அமைப்பை தலைமை ஏற்று யார் தொடங்கினாலும்,அல்லது அந்த அமைப்பு நிர்வாகத்தின் முக்கிய பதவியில் இருந்து வந்தாலும் அவர்களை எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நீக்கும் அதிகாரத்தை பொதுக்குழு நமக்கு வழங்கியுள்ளது. இதை நீங்கள் எல்லோரும் நன்றாக அறிவீர்கள். பொதுக் குழுவில் இயற்றப்பட்ட அந்த தீர்மானத்தை அடிப்படையாக கொண்டுதான் தாம்பரம் திரு.கோபி (IDNO:1438), திரு.வேணு (IDNO:4114) ஆகிய இருவரையும் சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்திருக்கிறோம். மேலும் இவர்களுக்கு ஆதரவாக CVPA சார்பாக யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. என்பதை நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு அறிவிப்பை எல்லா வாட்ஸ்ஆப் குழுவிலும் நாம் வெளியிட்டு இருந்தோம்.

இருப்பினும்,நம்முடைய சங்க அறிவிப்பை மீறி திரு.விஜயகுமார் அவர்கள் (IDNO:1485) இவர்கள் இருவருக்கும் ஆதரவாக செயல்பட்டதுடன், (சங்கம் நம் மீது நடவடிக்கை எடுக்கும் என தெரிந்திருந்தும்) அவர்கள் நடத்திய நிகழ்ச்சியில் CVPA சார்பாக கலந்து கொண்டதைப் போல ஒரு மாய தோற்றத்தை உருவாக்கியதுடன்,அவர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு,அன்று மேடையில் பேசிய வீடியோ பதிவை,அடுத்த நாளே நமது சங்க உறுப்பினர்கள் குழப்பம் அடைய வேண்டுமென்ற நோக்கத்தில், வேண்டுமென்றே அந்த பதிவை எல்லா வாட்ஸ்ஆப் குழுக்களில் பதிவிட்டார்.எனவே இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அவருடைய விளக்கத்திற்காகவும் சங்கம் காத்திருந்தது.இதற்காக அவருக்கு சங்க விதிமுறைப்படி கால அவகாசமும் வழங்கப்பட்டது. முறையாக சங்கத்திற்கு இதுநாள் வரை எவ்வித விளக்க கடிதமும் அவர் அனுப்பவில்லை. இதற்கு மாறாக எல்லா வாட்ஸ்ஆப் குழுக்களிலும், நீக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக பேசியதுடன், சங்க நிர்வாகிகள் வசைபாடி ஆடியோ வெளியிட்டு சங்க உறுப்பினர்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தி வந்த காரணத்தால், சங்க விதிமுறைகளின்படி அடுத்து வர இருக்கும் பொதுக்குழு வரை அவரை உறுப்பினர் பொறுப்பில் இருந்து தற்காலிகமாக இடைநீக்கம் செய்திருக்கிறோம். சங்கம் குறித்து தவறான தகவல்களை யூகத்தின் அடிப்படையில் பொதுவெளியில் திரு.விஜயகுமார் அவர்கள் பேசி வருவதை வன்மையாக கண்டிக்கிறோம்.அவருடைய சந்தேக கேள்விக்கான பதில்களை பொதுக்குழுவில் விளக்கமாக பதில் அளிப்பார்கள். இதுவே சங்க வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக இருக்கும்.

இதுநாள் வரை நமது சங்கத்தை வழி நடத்தி வந்தவர்கள் பலரும், நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இன்னும் இணையாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை. அவர்கள் எல்லோரும் இந்த திட்டத்தில் விரைவில் இணைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

ஆரம்பத்தில் NNT திட்டத்தில் இணைந்த பலரது NNT கணக்கு தற்போது ஜுரோ பேலன்ஸ் என்கிற நிலையில் உள்ளது.எனவே இழப்பு ஏற்பட்ட அல்லது ஏற்பட போகும் NNT உறுப்பினரின் குடும்பங்களுக்கு ஒரு பெரிய தொகையை NNT நிதியாக கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் நிலை உள்ளது.எனவே நாம் எல்லோரும் நமது கலைஞர்களின் குடும்ப பாதுகாப்பை உறுதி செய்ய NNT நிதியை உயர்த்த அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என உங்கள் அனைவரின் கரம்பிடித்து கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**P.துரைபாபு**

CVPA செயலாளர்.

**CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION**

**சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்**

51/24,Bangaru Street,Ellis Road, Chennai - 600002

Regd No. : 446/96 E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in Cell : 7824034734

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O |
|---|---|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |
| 7010936732 | 9282164723 | 9840374675 | 9551144144 |

10.2.2026

CVPA உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

வணக்கம்!

கடந்த 10.01.2026 அன்று நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானத்திற்கு எதிராக ஒரு புதிய அமைப்பை தொடங்கியவர்களை கண்டித்து, அவர்களை CVPA வின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து பொதுக்குழு தீர்மானப்படி நீக்கியதுடன் அந்த அறிவிப்பை நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எல்லா வாட்ஸ் அப் குழுக்களிலும் அதை வெளியிட்டிருந்தோம்.மேலும் அந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிகளுக்கும்,CVPA விற்கும் இந்த சம்பந்தமும் கிடையாது என்பதை தெளிவாக தெரிவித்திருந்தோம்.மேலும், இந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிக்கு CVPA சார்பாக கலந்து கொள்ள யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை என்பதையும் அந்த அறிவிப்பில் மிக தெளிவாக தெரிவித்து இருந்தோம். இதை மீறுபவர்கள் மீது நமது சங்கவிதி முறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மிகதெளிவாக குறிப்பிட்டிருந்தோம்.

நமது சங்கம் சார்பாக வெளியிட்ட அறிவிப்பை மீறி, அந்த அமைப்பு நடத்திய (11.01.2026 அன்று) நிகழ்ச்சியில்,அவர்களுக்கு ஆதரவாக திரு.விஜயகுமார் அவர்கள் கலந்து கொண்டு, மேடையில் பேசியதுடன், நமது CVPA சங்கத்தின் சார்பாக கலந்து கொண்டது போல் ஒரு தோற்றத்தை உருவாக்கி, அதை அவரே வீடியோவாக பதிவு செய்து,CVPA உறுப்பினர்கள் மத்தியில் குழப்பம் விளைவிக்கும் ஒரே நோக்கத்தில் எல்லா வாட்ஸ்அப் குழுக்களிலும் அதை பகிர்ந்து உள்ளார். சங்க அறிவிப்பை மீறி செயல்பட்ட திரு.விஜயகுமார் அவர்களிடம் இது குறித்து விளக்கம் கேட்டு நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஒப்புதலுடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அவருக்கு 15 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவரிடம் இருந்து 31.01 2026 வரை எவ்வித விளக்க கடிதமும் சங்க அலுவலகத்திற்கு வரவில்லை. இதற்கு மாறாக, 31.01.2026 அன்று எல்லா வாட்ஸ்அப் குழுக்களிலும் சங்க நிர்வாகிகளை கலங்கப்படுத்தும் விதமாக பேசி அவருடைய ஆடியோ வாய்ஸை ஒன்றை பதிவு செய்து அதை எல்லோருக்கும் பகிர்ந்துள்ளார்.இதில் இருந்து அவர் சங்க விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு போகும் தன்மை இருப்பதாக தெரியவில்லை. சங்கத்தில் கலகம் ஏற்படுத்த நினைக்கும் அவருடைய செயலை நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு கண்டிக்கின்றது.எனவே, "திரு விஜயகுமார் அவர்கள் அடுத்து வரும் பொதுக்குழு வரை, CVPA -ன் உறுப்பினர் பொறுப்பில் இருந்து இடை நீக்கம் செய்யப்படுகிறார்.இந்த அறிவிப்பு நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.எனவே சங்கம் தொடர்பாக திரு.விஜயகுமார் அவர்களிடம் தொடர்பு கொள்வதை தவிர்க்குமாறு CVPA உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இப்படிக்கு


| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O. |
|---|---|---|---|
| V.புருஷோத்தமன் | P.துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |

நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்





CVPA நிர்வாகத்தில் கொடுங்கையூர் பகுதி செயலாளராக இருந்து வரும் திரு.ராஜேஷ்–திருமதி.ஜெயசுதா தம்பதியினர் கட்டிய GR இல்லத்தின் (01.02.2026) புதுமனை புகுவிழா சிறப்பாக நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பாக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் மேலும் பல முக்கிய பிரமுகர்கள் புதுமனை புகுவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.




வடசென்னை,வண்ணாரப்பேட்டை பகுதியை சார்ந்த நமது CVPA உறுப்பினர் திரு.உதயா அவர்களின் இல்ல திருமண விழாவில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



வடசென்னை ,ரெட்ஹில்ஸ் பகுதியை சார்ந்த நமது CVPA உறுப்பினர் வி.கே.கேப்சர் திரு.வெற்றி – தமிழ் கீர்த்தனா இவர்களுடைய திருமண வரவேற்பில் (08.02.2026) நமது சங்க நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு மணமகளை வாழ்த்தினார்கள்.



தென்சென்னை–எஸ்1 ,கோடம்பாக்கம் பகுதியை சார்ந்த நமது CVPA உறுப்பினர், வி.எம்.ஆர் மாடலிங் ஸ்டுடியோ திரு.முரளி–சாந்தி இவர்களுடைய மகனும், நமது சங்க உறுப்பினருமான திரு. ரஞ்சித் – தர்ஷினி யின் திருமண வரவேற்பு (14.02.2026) நிகழ்சியில் CVPA நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள் மற்றும் சங்கத்தை சேர்ந்த சக உறுப்பினர்களும் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்கள்.



வடசென்னை, தண்டையார்பேட்டை பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. அபிஷேக் – அபிநயா ஆகிய இருவரின் திருமண வரவேற்பு விழாவில் நமது சங்கத்தின் சார்பில் நிர்வாகிகள் மற்றும் பகுதிசெயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய மகிழ்ச்சியான தருணம்




CVPAவின் முன்னால் தலைவர் திரு.சுரேஷ் அவர்களுடைய மகள் ராஷ்மி–அபினேஷ் திருமண நிகழ்ச்சியில் முன்னால் தலைவரும், CVPA நியூஸ் ஆசிரியருமான ஸ்ரீதர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



வடசென்னை, பெரம்பூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர், திரு.G. குருமூர்த்தி – திருமதி.G.சிவகாமி இவர்களின் மகள் G.வான்மதி என்கின்ற பூஜா – V.S.தரணிதரன் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் (23.02.2026) நமது சங்கத்தின் சார்பாக நிர்வாக குழு – செயற்குழு, மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களும்,நம்முடைய சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகளும் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.






தென்சென்னை எஸ்-2 ஆதம்பாக்கம் பகுதி செயலாளர் திரு.திலீப்குமார் அவர்களின் தாயார். திருமதி G.கல்பனா அவர்கள் மரணம் அடைந்ததை தொடர்ந்து, சங்க நிர்வாகம் மற்றும் பகுதி செயலாளர்கள்,சங்க உறுப்பினர்கள் சார்பாக இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. தாயாரை பிரிந்து வாடும் திலீப்குமார் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை cvpa சார்பாக தெரிவிக்கப்பட்டது.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351